புதினப்பத்திரிகையாக பதிவுசெய்யப்பெற்றது

ஸ்தாபிதம் (1889) ஆவணி ௨௨௳ இராமநாதசுவாமி.

# இந்து சாதனம்.

# THE HINDU ORGAN.

['ரேலிபோன்' இல. 56]

பத்திரக் கிரயம்.
யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு ரூ. 5-00
இலங்கை, இந்தியா: " ரூ. 8-00
தொலைப்பகுதி: " ரூ. 9.00
தனிப்பிரதி: சதம் 5
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவைகேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்"

விளம்பர விகிதம்.
முதன் முறைக்கு:—ஒருகலம் ரூ 10-00
" அரைக்கலம் ரூ. 5-00
" கால்கலம் ரூ. 3-00
அதேத முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா

புத்தகம்—சங. } யாழ்ப்பாணம்;-பிரசோற்பத்தி௵ ஐப்பசி௴ ௰௨, (1931 ஒக்டோபர் 26௳) திங்கட்கிழமை. { இலக்கம்—௬௬.

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா ளுணர்ச்சி தேங்கச்
செம்பூத்த விகமாக மங்க வோங்கப்
வார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த வொனந்தத் தினிது துங்கப்
கிளைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வதிவிச்சை தொழிலென்றேனு
மதம்பூத்தவிநாயகன்றன் வணங்கிவாழ்வாம்

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## திறம் கொளுக்கி ஓடுகள்,

மோர்கன், நட்சத்திரம் 14, இஞ்சுப் பக்கா ஓடு முதலியன அடைமழைக்குங்கசியா. அண்டப் பார்த்தாப் போலக் கூரையில் அடுக்கலாம். பாரங்குறைவு, பெலனதிகம்; நல்ல அழுத்தமான இந்த ஓடுகள் 125 போட்டால், மற்ற ஓடுகள் 150 போடுகிற இடத்தை மூடும்.

விற்கும் இடங்கள்:—
யாழ்ப்பாணம்:—
மு. இராசேந்திரமுப்பர்
கிட்டங்கித்தெரு.
பரித்தித்துறை:—
மு. நமசிவாயம்
கடைத்தெரு.
ஊர்காவற்றுறை:—
கரம்பன்.
திருக்கோணமலை:—S. சின்னையா
வில்லூண்டி.

(H 12, 10-1-32.)



தங்க மெடல்கள் பெற்ற
ஐரோப்பிய மதுரைக் கம்பனியாரால்
செய்யப்படும்,
திறமான குடை அடையாளமுள்ள
## கொழுக்கி ஓடுகள்.

மதுரைக் கம்பனியார் சிறந்த குடை அடையாளமிட்டு [illegible] ஓடுகளை வெகு பணிக்காய் அமைத்திருக்கிறார்கள். வெயில், மழை, செருப்புக்கு இதினும் மேலான பாதுகாப்பு உபகரணம் வேறொன்றில்லை. பல தொழில் நிபுணரின் பரிசோதனையால் இதன் இயற்கை மெச்சப்பட்டது இதுவரை 10 தங்க மெடல் பரிசுக்குக் கம்பனியாரைத் தகுதியுடையவராக்கிப் புகழ்பெற்றது மிக இலேசானது மலிவானது ஒவ்வொரு ஓட்டிலும் குடை அடையாளம் விளங்கும். காங்கேசன் துறையிலே நவமாகக் கட்டப்படும் அரசினரின் சுகஸ்தான கட்டடங்களுக்கென இக்குடை அடையாளமுள்ள 55,000 ஓடுகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இனத்திலே கண்ணாடி ஓடுகளுமுண்டு

ஜே. செருபிம் அன்ட் பிறதர்,
ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.
(Y 9 8 1—31 12 31)

## ஸ்ரீகதிரைமலைத் திருப்பணி.

கலிவிருத்தம்.

திருமலிந்திடு தென்னிலங்கையின்
மருவுசண்முகன் மலையினன்பணி
புரியவேசிறு பொருள்கள்வேண்டுதீர்
அருளியாங்கவனருள் பெற்றுய்ம்மினே.

தருமசீலர்களே!

உலகிலுள்ள எவ்வகை ஆத்மாக்களுக்கும் தம்முடைய அருட்செல்வத்தை வரையாது கொடுக்கும் வள்ளலாகிய அறுமுகப் பெருமான் கோவில் கொண்டருளிய ஸ்ரீகதிரைமலையிலமைந்திருக்கும் விவேகானந்த மடத்தில் தாகமுற்றடைந்தோர்க்குத் தாக சாந்தி செய்விக்கப்பட்டு வருகிறது. அன்றியும் முன்னே அம்மலைக்குச் செல்வோர்க்கு அதிக கஷ்டத்தை விளைத்த சுற்று வழிகளை நீக்கி இப்போ அதிக சமீபமாகிய வழியைத் திறந்து முந்நூற்றைம்பது படிவரையில்பலபெரியோர்களது முயற்சியினாலும், திரவியோபகார சகாயத்தாலும் செவ்வனே கருங்கற் கட்டிடமாய் கட்டப்பெற்றுள்ளது. எஞ்சிய கருங்கற் கட்டிடத்திருப்பணியைமுற்றுவித்தற்குஇப்போது பொருளுதவிவேண்டும். ஆகையால் பணம் அனுப்புவோர், தெளிவாகத் தங்கள் விலாசத்தை யெழுதி கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:—R. சிந்தாமணி அவர்கள்,
கச்சேரி யாழ்ப்பாணம்,
மேற்பார்த்து ரவண சங்கு சாது வாம் கொடுப்பது.

(H. Y. 9. 8-6 7 12-31)

## உயர்தரமான தமிழ் நூல்கள்!

(1) தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு மெய்கண்ட விருத்தியுரையுடன் ரூ. 4. (2) பட்டினத்துப்பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய பிரபந்தத்திரட்டின் விருத்தியுரை ரூ. 3½. (3) திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், தெளிபொருள் விளக்கப் பதவுரையும், விசேஷக்குறிப்புகளுடன் ரூ. 4. (4) விநோதரசமஞ்சரி ரூ. 2. (5) அராபிக் கதை ரூ. 2½. (6) பழமொழியகராதி ரூ. 3. (7) ஆத்திசூடிப்புராணம் ரூ. 2. (8) கல்லாடம் மூலமும் உரையும் ரூ. 3. (9) நாலடியார் ரூ. 2. (10) நைடதம் மூலமும் விருத்தியுரையும் ரூ. 4. (11) ராமகிருஷ்ணபரமஹம்ஸர் விரிவான சரித்திரம் ரூ. 3.

தமிழ்புத்தகசாலைக்கு
→ இனம் ←
ஒற்றுமை ஆபீஸ்.
2. சைதாப்பேட்டை, மதருஸ்.

ஒற்றுமை ஆபீஸ், சைதாப்பேட்டை, மதராஸ்.

(Y 17 7 9—8 9-32)

Established 1909. A S. M. A. Khader Brothers

மருந்தேயாயினும் விருந்தோடுண், என்ற ஔவைப்பிராட்டியாருரைப்படி

இந்த விளம்பர முழுதும் தாங்களும் வாசித்து
தங்கள் சிநேகிதர்களுக்கும் வாசித்துக் காண்பியுங்கள்.

குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக்கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

மாறுபாடில்லாதவுண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடில்லையுயிர்க்கு. (குறள்.)

தன்பமுறுவது நம்முயிரேயாதலால் மூவகைத்தோஷத்தாலும் பிணிவாராதளவில் தடுப்பதற்காகிய நல்லவிதமாகிய அவிழ்தங்களை உண்டவர்களுக்கு பிணிகளால் துன்பமில்லையென திருவள்ளுவநாயனார் கூறிய திருக்குறளைபுணர்ந்த அறிவிற்சிறந்த அன்புடையோரே அருந்தக்கடவீர்களாக.

நாகங் கெட்ட தேகத்தைக் காக்கும்; நாட்பட்டரோகத்தைப் போக்கும்.

உங்கள் பணத்திற்கும் மருந்தின் குணத்திற்கும் உத்தரவாதமளிக்கப்பட்டது.

சிகரற்றது! குணமுற்றது!! மகிழ்வுற்றது!!! புகழ்பெற்றது!!!!

## ஜீவானந்த தாது விர்த்தி லேகியம்.

ஓ! அன்பர்காள்!! ஒருவனுக்கு வீரியத்தில் ஏதேனும் விகர்ப்பமுண்டாயிருக்கின் அவன் எவ்விதச்சர்தோஷத்திற்குரியவனாயினும் வீரியக்கெடுதலின் காரணார்த்தமாகவே அவன் மனதிற்கு மேலும் மேலும் விசனத்தைத்தான் உண்டாக்கச்செய்யுமென்பது ஆயுர்வேத சாஸ்திரங்களின் துணிபுத் தவிர, இராஜாங்க வைத்தியர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். அதுவே, நபுஸகம், அல்லது பேடித்தனமென்று சொல்லப்படும் அவ்விதத்துக்காரமான கொடிய வியாதியை அடியோடுதொலைத்து உலகின் வாழ்க்கையில் என்றுங்காணாத ஆனந்த சுகாதாரவின்பத்தையடையச் செய்விப்பதில் இந்த ஜீவானந்த தாது விர்த்தி லேகியமே மிகவுஞ் சிறந்தது. இந்த லேகியத்தின் முக்கிய குணமாவது: இளமைப் பருவத்தில் பற்பல துர்ச்செய்கைகளினால் நடுப்பிராயத்தில் தேகபலங்குன்றி நரம்புகள் தளர்வடைந்து இரத்தம் கெட்டுப்போய் சந்தானவிர்த்தியில்லாமல் வயோதிகர்போல் மயங்கிநிற்கும் புருஷர்களும், வாதாதி மூவகை தோஷத்தால் உஷ்ணமுண்டாகி பிரமேகச்சூட்டால் நாதமானது ஜலம்போல் நீற்று, கைகாலசதி மலச்சிக்கல், பசியில்லாமை, ஜீரணக்குறைவு, சித்திராபக்கமென்னும்ஸ்கலிதம், துரிதஸ்கலிதம், மூளையின்கொதிப்பு கண்ணெரிவு, தேகஅனல் இடுப்புவலி, நீர்கடுப்பு, நீரெரிச்சல், நீர்சுருக்கு முதலிய சர்வரோய்களையும், நோய்க்குத் தக்கபடி 40, அல்லது 20 நாளில் பூரணமாய் சுகப்படுத்தி, இரத்தத்தை சுத்திசெய்து தங்கள் தங்கள் சுபாவத்திற்கு மேலான வீரியத்தையும், மனவுற்சாகத்தையும் உண்டாக்கி, இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, தேகசக்தி, சந்தானவிர்த்தி, முதலிய நலன்களைச் செய்வதில் இதுவே மேலானதென்றும் கடவுளுக்குப் பொதுவாய் உறுதியாகச் சொல்லுகின்றோம், அப்படி இதில் சுருக்கமாய் காட்டியுள்ள குணாலத்திற்கு மேற்கொண்ட பலனையடையவில்லையென்று கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின்பணத்தை உடனே வாபீஸ் செய்விக்கப்படும். அப்படி டை கிரயத்தை கொடுக்கத் தவறினால் கோட்டுமூலமாக வசூல் செய்து கொள்ளலாம். மேலும் இம்மருந்தின் குணாலத்தைப்பற்றிச் சந்தேகிக்கிறவர்கள், நமது மருந்தாலயத்திற்கு நேரில்வந்து தங்கள் தங்களுக்குரிய சந்தேகத்தை போதுமானவரையுமுன்ன கிலாரணைச் செய்துகொண்டு வாங்கலாமென்பதாயும் திண்ணமாய் கூறுகின்றோம்,

40 நாள் 80 வேளை டப்பி 1க்கு கிரயம் ரூ 8 0 0
பரீட்சைக்கு 20 நாள் 40வேளை டப்பி 1க்கு ரூ 4 0 0

வி பி தபால் சார்ஜ் பிரத்தியேகம், முற்பணமனுப்பினால் வி. பி. தபால் செலவு இனமாய் அனுப்பப்படும். பினாங்கு, சிங்கப்பூர், சிலோன், சிறம்பான், கோலாலம்பூர் ஆகிய ஐக்கிய மலாய் நாட்டு வாசர்களும் மருந்தின்கிரயமும் தபால் செலவு ரூ 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டியது. டை பிறதேசவாசர்கள் அட்வான்ஸ் அனுப்பினால், பாக்கி தொகைக்கும் வி. பி. யில் அனுப்புவோம். ஆர்டர் செய்பவர்கள் இப்பத்திரிகையின் பெயரை குறிப்பிட்டெழுதவும்.

Our Sole Agent:
P. M. Abdulcader Esqs,
Ceylon Post Agency
No. 105, Piachaud's Lane Maradana,
Colombo, Ceylon.

எமது விலாசம்:
ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
நைதுல் முஸ்லிமீன் மெடிக்கல் ஹால்
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா,
இந்தியா.

(Y 15 6-7-31—5-7-32)

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகனைவைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுண்டானுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போதுஇந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, ஜாதிக், கஸ்தூரி, குமாரநாகர, சிநாகு, சாலாமூஸ்லி, சப்பேமுத்ஸ்லி, கிஸ்தாண, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, கீர்முன்னிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் கிகிறிவு, கீக்கப்படு, கீரடைப்பு, மூலச்சூடு, இருவருடித்துள் உண்டாகிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தசாமாலை, பித்தபாண்டு, பீனிசம் கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ஒருதரம் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைறாத்தலுக்கு ரூபா ௧0. கால் றாத்தலுக்கு ரூபா ௫ தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொலைவாசிகளுக்குப் பகுதிக்கு வீ. பி. சட்டம் இல்லாததினால் முன்பணம் ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
இலங்கை.

(Y.75. 31-12-31.)

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: பிரசோற்பத்திஸு ஐப்பசிமீ ௧௦உ திங்கட்கிழமை.


## சமய உணர்ச்சி குன்றுதல்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் காலந்தொடக்கமாகச் சைவசமயப் பிரசங்கம் யாழ்ப்பாணத்தில் கிரமமாக நடைபெற்று வந்தது. நாவலரவர்களுக்குப் பிற்காலத்திலுள்ள அறிஞர் பலர் சமய உண்மைகளையும் அநுஷ்டான முறைகளையும், தங்கள் அறிவுக்கு எட்டியவரையில் சனங்கட்கு எடுத்துப் போதித்து வந்தார்கள்; சைவபரிபாலன சபை, விவேகானந்தசபை, சைவ வாலிபர் சங்கம் என்னும் இவைகளின் ஆதரவிற் காலந்தோறும் பிரசங்கங்கள் நடைபெற்று வந்தன. முன்னருள்ள எப்பத்திரிகைகளும் சமயஉண்மைகளை எடுத்துக்காட்டி வந்தன. இந்த இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்கள் வாயிலாக, காலஞ்சென்ற ஸ்ரீமான் சபாரத்தின முதலியாரவர்கள் சமயசம்பந்தமான பல விஷயங்களைத் தொடர்பாக எழுதி வெளியிட்டு வந்தனர். ஆலய வழிபாடு ஆடு கோழிகளைப் பலியிடுவதனால் வருந்தோஷம் என்னும் இன்னோரன்ன விஷயங்கள் எழுதப்பட்ட துண்டுப்பத்திரங்களும் முன்னர்க் காலந்தோறும் வெளிவந்தன. பிரமஸ்ரீ சங்கரசுப்பிரமணியசச்சிதானந்த ராசயோகிகள் சிலவருடங்களாக இங்கேவந்து செய்த கதாப்பிரசங்கங்கள் இங்குள்ளார் பலரின் மூடக்கொள்கைகளை அகற்றி அவர்களை நன்னெறிப்படுத்தின. சமயசாஸ்திரக் கல்வியும் சைவவித்தியாசாலைகள்தோறும் கிரமமாக மாணக்கருக்குப் பயிற்றப்பட்டு வந்தன. இந்த விஷயத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் எழுதிய முதற் சைவ வினுவிடை, இரண்டாஞ் சைவவினுவிடை, பெரியபுராண வசனம், திருவிளையாடற்புராண வசனம், நாவலரவர்கள் உரையெழுதி வெளியிட்ட சைவசமயநெறிஎன்னுமிவைளும்; ஸ்ரீ சு. சிவபாதசுந்தரமவர்கள் எழுதிய முதலாம் இரண்டாம் மூன்றுஞ் சைவபோதங்கள், சைவக்கிரியை விளக்கம், கந்தபுராண விளக்கம் என்னுமிவைகளும் பெரிதும் பயன்பட்டு வந்தன. இவைகளெல்லாவற்றைக்காட்டிலும் இங்குள்ள கோயில்களில் வருடந்தோறும் கிரமமாக நடைபெற்று வந்த கந்தபுராணம் பெரியபுராணம் திருவிளையாடற்புராணம் திருவாதவூரடிகள் புராணம் மயூரகிரிப்புராணம் திருச்செந்தூர்ப் புராணம் என்னும் இப்புராணபடனங்களால் நம்மனோர் அடைந்துவந்த நன்மை அதிகமெனலாம்.

இப்படியே மேற்சொன்ன ஏதுக்களினால் இங்குள்ள சைவநன்மக்களாகிய சிறுவர் சிறுமியர், வளர்ந்த ஆண்கள் பெண்கள் எல்லாரும் சைவசமய உண்மைகளை அற்பமாகவோ அதிகமாகவோ அறிந்து ஒழுகத் தக்கவர்களானார்கள். ஆனாற் சென்ற இரண்டு மூன்று வருடங்களாக நம் சைவசமய விர்த்திக்கும் உணர்ச்சிக்கும் ஆகிய இந்தச் சற்கருமங்களெல்லாம் குன்றத் தலைப்பட்டுக்கொண்டன. சைவசமயப் பிரசங்கங்கள் இப்போது அபூர்வமாயின; பத்திரிகைகளில் சமயவிஷயங்கள் வெளிவருதல் குறையத்தொடங்கியது. சமயசம்பந்தமான துண்டுப்பத்திரங்கள் வெளிவராதொழிந்தன. சமாசன சமடோசனக் கலகம் நேர்ந்தபின் சைவவித்தியாசாலைகள் பல நிலை தளர, சமயசாத்திரக்கல்வி சைவ வித்தியாசாலைகள் கல்லூரிகள் எவற்றினும் அலட்சியஞ் செய்யப்படலாயிற்று. சைவாலயங்கள்தோறும் கிரமமாக நடைபெற்று வந்த புராணபடனங்கள் கேட்பாரில்லாமையாலும், பொருள்செலவிடுவாரில்லாமையாலும் காலந்தோறும் அருகிவரலாயின. மகோற்சவகாலங்களில் திருவிழாச் செய்வோர் தம் செலவிற் சைவப் பிரசாரகர்களை இடையிடையே அழைத்துப் பிரசங்கஞ் செய்வித்துவந்ததாகிய சற்கருமத்தையும் கைவிட்டனர்.

இப்பொழுது நம்மவர்கள் சைவசமயவுணர்ச்சி அபிமானம் என்ற இவைகளைக் கைவிட்டு அரசியல் விஷயத்திலேயே தலையைப் புகுத்திக்கொண்டு இடர்ப்படுகின்றனர். பத்திரிகைகளும் இப்படியே; துண்டுப்பத்திரங்களும் இந்த இயல்பினவேயாம். கூட்டங்கூடிப் பேசப்படுவனவும் அரசியல் விஷயமாகும். பள்ளிக்கூடச் சிறுவர் சிறுமியர் சமையம்வாய்க்கும்போது படிப்பதும்சம்பாஷிப்பதும் அரசியல் விவகாரங்களைப் பற்றியனவாகும். இதனால், நாம் அரசியல் விஷயத்தைக் கைவிட்டுச் சமயவிஷயத்தைத்தான் முற்றாக ஆராய்ந்துகொண்டும் விருத்தி செய்துகொண்டும் இருக்கும்படி சொல்லவரவில்லை என்பதை அவதானித்துக் கொள்க. முதல் நம்முடைய [illegible] உணர்ச்சிக்கான செயலும் இரண்டா[illegible] சியல் விஷயமும் பிறவும் வைத்தெண்ணப்பட வேண்டுமென்பதே எமது வேண்டுகோள்.

நாம் நம்முடைய சமயஒழுக்கத்திற் சிறிதேனும் திறம்பாமல் நிற்போமானால், அரசியற் கருமங்களும் எங்கட்கு நன்மையாகவே முடியும்; முழுமுதற்கடவுளாகிய இறைவனுக்கு அடிமையாவோமானால் அந்நியர்க்கு நாங்கள் அடிமையாகவேண்டி வராமாட்டாது; ஒருவர் ஒரேயொருவருக்கு அடிமையாக இருக்கலாமேயல்லாமல் இருவர்க்கு ஏககாலத்தில் அடிமைத்திறம் பூண்டு தொண்டுசெய்தல் முடியாது; தனித்தனி இறைவனுக்கு அடிமைத்திறம் பூண்டு அரசனை வென்றவர்கள் திருஞானசம்பந்தமூர்த்திநாயனர், திருநாவுக்கரசு நாயனர் என்னும் சமயகுரவராவர்; "ஈனர்கட் கெளியேனலேன் திருவாலவா யரனிற்கவே" என்று சம்பந்த சுவாமிகள் சொல்லியருளியபிரகாரம் முழுமுதற் கடவுளாகிய இறைவனது திருவருள் சித்திக்குமானால் அரசாதிகாரமும் நமக்குப் பிறர் இடையூறு செய்வதும் அசாத்தியமாகும். இப்பொழுது இங்குள்ள சைவநன்மக்களாகிய நாம் உலோகாயதர்கள்போல உலகவின்பமே மெய்யென நம்பித் தெய்வத்தை மறந்து உலக விவகாரத்தில் ஈடுபட்டுக் கிடக்கின்றோம் இதனாற்றான் எங்கட்கு எல்லாவிதமான தீமைகளும் நேரத் தலைப்பட்டன. அரசினரும் அயலவராகிய சிங்களரும் எங்களை முறையே புறக்கணிப்பதும் தூஷிப்பதுமாகும். ஆதலால் இனியேனும் நம்மனோர் இந்தச் சஞ்சல புத்தியை விடுத்து எங்கள் சமய உணர்ச்சிக்கும் அதுவாயிலாகப் பத்தித் திறத்திற்கும் ஏதுவாகிய சைவசமயப் பிரசங்கம், சமயசாஸ்திரக்கல்வி, சமயசம்பந்தமான விஷயங்களைப் பத்திரவாயிலாகவும் துண்டுப் புத்தக வாயிலாகவும் பரப்புதல், புராண படனம் என்று சொல்லப்படும் இச் சற்கருமங்களைத் தொன்மை போல் நன்கு நடைபெறச் செய்தல்வேண்டும் இவற்றை எங்ஙனம் விருத்திபண்ணுவதென்ற விஷயத்தைச் சந்தர்ப்பம் வாய்க்கும்போது ஆராய்வோம்.

## நகரசங்கமும் கடைக் குத்தகையும் இடையில் கடைக்காரரும்.

யாழ்ப்பாணம் பெரியகடையை வருடா வருடம் நகரசங்கத்தார் குத்தகைக்கு விற்பதும், அக்குத்தகையை ஒருவரோ அன்றி இருவரோ கூடி விலைகொடுத்து வாங்குவதும், அக்குத்தகைகாரர் அங்கு கடைவைத்திருப்பவர்களிடம் நான்விதம் பணம் அறவிட்டு தமது குத்தகைப் பணத்தைக் கட்டுவதும் வழக்கமாயிருக்கின்றது. இந்த வழக்கத்தின்மீது நாம் குறைகூற வரவில்லை ஆனால் எதொரு விஷயத்தையும் அரசாட்சியுடையார் தாமும் செய்யும்போது பிரசைகளின் நன்மையையும் தேச கால நிலைமைகளையும் நன்கு சீர்தூக்கிச்செய்தல்வேண்டும். இவ்வருடம் மிடியும் வறுமையும் வெறுமையும் உலகத்தில் எப்பாகத்தையும் வருத்திக் கொண்டிருப்பதை யார்தாம் அறியார். ஆகவே இவ்வருடக் குத்தகையை முன் வருடத்திலும் ஏற்றமான கேள்விக்காரனுக்குக் கொடுப்பது நகரசங்கத்தின் நோக்கமாயிருப்பின் அது நீதியின்பாற்பட்டதாகாது. ஏற்றமாகப் பணங்கொடுத்துக் குத்தகையை வாங்கும் குத்தகைகாரர் தன் வீட்டுப் பணத்தையா கொடுக்கப்போகின்றனர். ஏழைகளாயுள்ள கடைக்காரரன்றோ இத்தொகையைப் பொறுக்கவேண்டியவர்களாவர். இதை நமது சங்கத்தார் அவதானிக்குமவண்ணம் கேட்கின்றோம்.

இதுவிஷயமாக நாளை 27-10-31-ல் கடைத்தெருவிலிருக்கும் பாரதிபாஷிய வித்தியாசாலையில் சாயந்தரம் 7 மணியளவில் ஒரு பொதுக் கூட்டம் கூட்டப்படுமென பெரியகடை வியாபார சங்கத்தார் அறிவிக்கின்றனர். வியாபாரிகளுள் ஒற்றுமையேற்பட்டால் எல்லாம் ஒழுங்குற நடைபெறுமென்பது வெளிப்படை.

## கால நிலை.

சென்ற சனிக்கிழமை (24-10-31) அதிகாலையில் நல்லமழை பெய்தது; இன்னமும் மழைக்கோலம் காணப்படுகின்றது. ஊர் குளிர்ச்சியடைந்திருக்கிறது. ஆனால் நீர்நிலைகளில் தண்ணீர் வருதற்கு இன்னமும் மழை பெய்தல்வேண்டும்.

## விவாகம்.

வண்ணார்பண்ணை ஓட்டுமடத்தடி ஸ்ரீ R. சின்னத்தம்பியவர்களின் புத்திரன் ஸ்ரீ கனகரத்தினத்திற்கும், தலவாக்கொல்லையில் லோமர்செற் தோட்டத்தில் உத்தியோகம்பார்க்கும் சுதுமலை ஸ்ரீ கனகசபையவர்களின் புத்திரி ஸ்ரீமதி கனகாம்பிகையம்மாளுக்கும் சென்ற வெள்ளிக்கிழமை (23-10-31) இரவு நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் விவாகம் சிறப்பாக நடைபெற்றது. தம்பதிகள் சகல ஐஸ்வரியங்களும்பெற்று இன்புற்று இனிது வாழும்வண்ணம் ஈசன் திருவருள் முன்னிற்பதாக.

## மன்னாரிற் தண்ணீர்ப் பஞ்சம்.

சென்ற 2மாசகாலமாக மன்னார்ப்பகுதியில் மழையில்லாமையினால் நீர்நிலைகளெல்லாம் வற்றிவிட அங்குள்ளார் குடிக்கத்தானும் தண்ணீரின்றிக் கஷ்டப்படலாயினர். பன்னூற்றுக்கணக்கான ஆடுமாடுகள் இதனால் மாண்டுபோயின ஒரு வாளி தண்ணீர் 1சத விதம் விற்கப்படுகின்றது சிலவிடத்தில் தண்ணீர் வாங்கத்தானும் காசில்லையாக, இப்பொழுது மன்னார் அதிகாரிகள் சமீபத்திலுள்ள புகைரத ஸ்தானங்களிலிருந்து நீர்மொண்டு புகைரதமூலமாகக் கொண்டுவந்து கரும்படி புகையிரதப்பகுதித் தலைவரைக்கேட்டு ஒழுங்கு செய்திருக்கின்றனர்.

## புகையிரதப்பிரயாணச்சீட்டு.

புகையிரதப் பிரயாணச் சீட்டுக்களைப் போகவர முன்போல் உதவாது, போவதற்கு மாத்திரம் 3ம் வகுப்புக்கு கொழும்புக்கு 5 ரூபா 75 சதமாகவும் இந்த விதப்படியே மற்றைய வகுப்புகளுக்கும் குறைக்கவும் ஆலோசனை செய்யப்படுகின்றது. இதன்படி இப்பொழுது 9 ரூபா 60 சதத்துடன் 14நாட்களுள் சென்று மீளும் ஒரு பிரயாணி இனிமேல் 11 ரூபா 50 சதம் கொடுத்துச் சென்று மீளவேண்டும். ஆனால் குறித்த தவணைக்கு மாத்திரம் தங்கவேண்டியதில்லை என்றாலும் இது மிக ஏற்றமான வேதனமாகும். போகவர உள்ள தொகையாகும் 9-60-ஐ இரண்டாற் பிரித்து போகும் வேதனம் ஆக்கினாற்றான் அரசினர் பிரசைகட்குச் சகாயஞ் செய்தவராவர்.

## 'பீடி' புகையிலை பிடிக்கப்பட்டது

கடந்த 17உ சனிக்கிழமை வல்லுவெட்டித்துறைக் கணித்தாகவுள்ள கடலிலே E. இராசா என்னும் தண்டையலும் இன்னும் மூன்றுபேரும் சோரமாகப் பீடி புகையிலை இறக்குமதிபண்ண எத்தனித்தமை, மிஸ்டர் T. சதாசிவம் என்னும் துறைமுக உத்தியோகத்தரினால் மிக கெட்டித்தனமாகக் கண்டுபிடிக்கப்பட்டது இவ்வுத்தியோகத்தர் தமது மோட்டர் வள்ளத்தில் குறித்த தோணியை துரத்திப் பிடித்தனர்.

பிடிபட்ட புகையிலை 1200 இறாத்தல் ஒவ்வொரு இறாத்தல் புகையிலைக்கும் அரசாட்சித் தீர்வை ரூ 4 ச. 25 ஆகும். இத்தொகை புகையிலையைச் சோரமாக இறக்குமதி பண்ணிவிட்டால் அரசினர் தீர்வையினால் இழக்குமிடுவது ரூ. 5100 ஆகும். ஒவ்வொரு இறாத்தல் புகையிலையின் விலை இந்தியாவில் 50 சதமாகும் இப் புகையிலையைச் சோரமாக இறக்குவதில் சித்தி பெற்றுவிட்டால் சோர வியாபாரிகள் ஒவ்வொரு இறாத்தல் புகையிலையிலும் ரூபா 2=சதம் 50 குறைந்த பட்சமாகப் பெறலாகும்.

## முறிகண்டி புகையிரதம் நிற்கும் ஸ்தானம்.

இற்றைக்குச் சின்னாட்களின் முன்னே யாழ்ப்பாணத்திலுள்ள அநேகர் கைச்சாத்திட்ட ஒரு வேண்டுகோள் இலங்கைப் புகையிரதப் பகுதியாருக்கு இராசவாசல் முதலியார் நாராளபிள்ளை அவர்கள் மூலமாகச் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த வேண்டுகோளிலே வரதப்பெருமானாரும் விக்கினேஸ்வரர் எழுந்தருளியிருக்கும் முறிகண்டி என்னும் இடத்தில் புகையிரதங்களையும் றயில் மோட்டார்களையும் தங்கி பிரயாணிகளை ஏற்றியும் இறக்கியும் விடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதன் பயனாக இப்போது (27-10-31) ஆகிய நாளை செவ்வாய்க்கிழமைதொடக்கமாக யாழ்ப்பாணத்திலிருந்து காலை 6-10க்குப் புறப்படும்புகைரதம் முறிகண்டியில் 9-30மணிக்கும் யாழ்ப்பாணத்துக்கு மாலை 7 மணிக்கு வரும் புகையிரம் 4-50 மணிக்கும் பிரயாணிகளை ஏற்றி இறக்கும்.

இப்படியாக இந்த வண்டிகள் தங்குவது முறிகண்டிக் கடவியான் தங்கும் இடத்திற்கு எதிராக (198-3/4 மைலுக்குக் கிட்ட) ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையிலும் வெள்ளிக்கிழமையிலுமேயாகும். இந்த ஒழுங்கு ஒரு மாசகாலத்திற்காகும். அதனபின் இந்த ஒழுங்கின்படி பிரயாணிகள் போக்குவரவு அதிகப்பட்டுக்கொண்டே வந்தால் அந்த இடத்தை ஒருசிறுபுகையிரதஸ்தானமாக்குவார்களெனவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஸ்ரீ நாராளபிள்ளை முதலியாருக்கும் புகையிரதப்பகுதியாருக்கும் இலங்கைமக்களின் நன்றி யுரியதாகுக.

## யாழ்ப்பாணச் சிறைச்சாலை மர்மங்கள்.

யாழ்ப்பாணச் சிறைச்சாலையிலிருந்து தப்பிப்போய்ப் பின்னர் அகப்படுத்தப்பட்டவர்களாகிய பொடியா, சின்னை அப்பு என்னுமிருவர்மீது பொலிஸ் பரிசோதகராகிய R. ஸ்ரீயூவாட் என்பவர் இவர்கள் யாழ்ப்பாணம் வியாபாரசமுதாயப் பணவங்கியில் திருட முயன்றார்களென யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் வியாச்சியந் தொடர்ந்துள்ளார். இந்த வியாச்சியத்திற் சம்பந்தப்பட்ட எதிரிகளுள் ஒருவனாகிய பொடியா சொன்ன வாய்ப்பிறப்பில் யாழ்ப்பாணச் சிறைச்சாலையிலுள்ள மர்மங்கள் பல வெளிவரலாயின.

வடமாகாண உதவிஏஜண்டரும் சிறைச்சாலைத் தலைமை யுத்தியோகத்தருமாகிய மிஸ்டர் A. R. கல்லக் தாம் சொன்ன சாட்சியத்தில் குறித்த இரண்டு மறியற்காரரும் சென்ற ஜூன்மீ 13-ந் திகதி யாழ்ப்பாணச் சிறைக்கூடத்திலிருந்து ஒளித்தோடினார்களென்றும், முதலெதிரியாகிய பொடியா என்பவன் ஜூன்மீ 24-ந் தேதி வரையில் அகப்படுத்தப்பட்டானென்றும்; இரண்டாம் எதிரியாகிய சின்னை அப்பு ஜூலாய்மீ 14-ந் தேதி அகப்படுத்தப்பட்டானென்றும் கூறினர். மேலும் மிஸ்டர் கல்லக் இந்த எதிரிகள் அகப்படுத்தப்பட்டபின் தமக்குச் சொன்ன சாட்சியத்தை நீதிபதிக்கு எழுத்திற் கொடுத்தார். அவற்றுள் பொடியா சொன்னவை வருமாறு:

"நான் 5½வருடமாகச் சிறையிலிருக்கிறேன்; சிறையைவிட்டு ஓடும் நோக்கம் எனக்குக்கொஞ்சமுமில்லை; சென்ற 9மாசமாக யாழ்ப்பாணம் மறியற்சாலையில் இருக்கிறேன்; இங்கேசென்னல மறியாய்நடந்துவந்தேன்; நான் தப்பியோடவேண்டுமேயாகிற் கொழும்பில் எனக்கு வசதியிருந்தபோது தப்பியோடியிருப்பேன்; இப்பொழுது இந்தச் சிறைச்சாலை உத்தியோகத்தர் சிலர் என்னைத் தூண்டியபடியினால், அவர்கள் விரும்பியபடி செய்ய நினைத்துத் தப்பி ஓடினேன்; சிறைக்காவலாளர்களாகிய எதிரசிங்கி, பொசேட்; அமரசிங்கி என்னுமிவர்கள் எனக்கு சிகரற், சுருட்டு, கஞ்சா என்னுமிவைகள் தந்து உதவுபவர்கள்; உவில்லியம் விருன்வில்ஸ், இசி என்னும் மறியற்காரருக்கும் இவர்கள் உதவிசெய்வதுண்டு; உவில்லியமே 2தடவை ஒருமித்துக்கட்டி பண்டசாலைக் கதவைத் திறந்து வெளியேபோவதற்கு உதவி செய்தவன்; குறித்த இரவு நான் கடுந்நித்திரை கொள்ளும்போது மறியற்காரனாகிய உவில்லியம் என் காலில் தன்காலால் தட்டி என்னை எழுப்பினான்; நான் வெளியே குதித்தபோது உவில்லியம் மற்றவர்கள் என்னைக் காணும்படி பாராக்குக்காட்டிவிட்டான்; இசிஎன்னும் மறியற்காரன் எரிந்தவிளக்கைக் குறைத்தான்; சின்னை அப்பு இரும்பு கலையை மேலே உயர்த்திவிட்டு சாலையின் வெளியே குதித்தான்; நானும் அவனைத் தொடர்ந்து சென்றேன்; அதன்பின் நானும் சின்னை அப்புவும் பண்டசாலைக்குட் போய் முந்தியே கட்டிவைக்கப்பட்டிருந்த தடிகளை எடுத்துக்கொண்டுபோய்ச் சுவரிற் சாத்தி ஒருவாறு ஏறிச் சுவரிற் குதித்து வெளியில் வந்தோம்; இறங்கினவுடனே எதிரசிங்கியும் சார்ள்ஸ் என்ற பொலிசும் எங்களைச் சந்தித்துக் கடற்கரைக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள். எதிரசிங்கியின் வீட்டிற்கு முற்புறத்தில் தெருவோரத்தில் ஒரு பழுதுபட்ட பஸ் நிற்கிறது; அந்த இடத்தில் எனக்கு ஒரு சாறமும் பனியனும், சின்னை அப்புவுக்கு ஒரு வேட்டியும் பனியனும் கொடுத்தார்கள்; எதிர்மன்னசிங்கியும், பொலிஸ் சார்ள்ஸ் என்பவரும் மாதர் பாங்கியை உடைத்துப் பணம் திருடும்படி எங்களுக்குச்சொன்னார்கள்; நாங்களிருவரும் அங்கே போய் கூரையில்ஏறி ஓட்டைப்பிரித்து உள்ளே இறங்கினோம்; அங்கே எல்லாம் கல்லால் இரும்புப் பெட்டகத்துட் பூட்டப்பட்டிருந்தபடியால் எங்களால் ஒன்றுஞ்செய்யமுடியவில்லை. பின்பு ஏறி மேலே வந்து இறங்கி அந்த இடத்தை விட்டு நீங்கினோம்; எதிரசிங்கி 10 சிகறற்றும், ஒரு தீப்பெட்டியும், காசு ரூபா 2–50 சதமும் என்னிடம் தந்தார்; உடனே, கடற்கரையில் ஒரு மோட்டாரதம் வந்தது. நாங்கள் 4 பேரும் அதில் ஏறி கொழும்பு மார்க்கமாகப் போனோம். 1மைல் தூரம் வந்தபின் எதிரசிங்கியும் சார்ள்சும் இறங்கிவிட்டார்கள்; சின்னை அப்பு வவுனியாவில் இறங்க நான் அநுராசபுரம் வரையிற் போனேன். அங்கே இறங்கி என் கூட்டாளி ஒருவனிடம் பணம் பெற்றுக்கொண்டு புகைரதமேறிக் கொழும்புக்குப் போய்ச் சேர்ந்தேன்; மோட்டாரதம் யாழ்ப்பாணத்திற்கு மீண்டுவிட்டது.

நாங்கள் போர்த்திருந்த போர்வைகளையும் பனியன்களையும் உடைந்த பஸ்ஸிற்குப் பக்கத்தில் நிலத்துட் புதைத்திருக்கிறோம். இப்படி நாங்கள் தப்பியோடும் விஷயம் 3 மாசங்கட்கு முந்தியே ஒழுங்கு செய்யப்பட்டது; மோர் பங்கியில் திருடுவதற்காகவே இப்படிச் செய்யப்பட்டது; தப்பியோடுவதற்கு 3 நாட்கள் முந்தி எதிரசிங்கி விருன்சில் மூலமாக ஒரு சட்டி எனக்குக் கொடுத்தனுப்பியிருந்தார்; மேற்பார்வைக்காரனாகிய ஜான்சிங்கி இதிற் சம்பந்தப்படுத்த எனக்குப் பிரியமில்லை; ஏனென்றால் அவர் மறியல் வீட்டில் எனக்குப் பல உதவிகள் செய்தவர்; களவு பொருளில் தானும் பங்குபற்றவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் அவர் உத்தியோக விடுதலை பெற்றவரென்பது

எனக்கு நல்லாய்த்தெரியும்; அவர் சிறைத்துறைத் தாமே கொண்டுவந்து தந்த கத்தியை விருன்சிஸ் இடகொடுத்து அனுப்பினுர்; மறியல்வீட்டுப் பட்டடையில் வேலைசெய்யும் கொல்லனுல் எதிரி சிங்கியின் கேள்விப்படி தான் அந்தக்கத்தி செய்யப்பட்டது; நாங்கள் தப்பியோடிய போது "ஓவசியர்" ஜான்ஸ் என்பவரும் எங்களை வெளியேவந்து சந்தித்தார்; அப்பொழுது அவர் கறுத்த உடைதரித்திருந்தார்; அவருடைய பெயரை ஒருபோதும் வெளியிடவேண்டாமென்று நான் சின்னு அப்புவுக்குப் பிடிபட்ட அன்றைக்குச் சொன்னேன்; ஏனென்ருல் திறமைக்காகிய பேட்ஜ்கள் அவருடைய சட்டையில் இருக்கின்றன.

நான் தப்பியோடப் போகின்றேனென்ற செய்தியை "ஓவசியர்" ஜயவர்தனவுக்குச் சொன்னேன்; தப்பியோடுவது புத்தியல்ல என்று அவர் சொன்னுர்; ஆனுல் உனக்குப் பல தொந்தரை இருப்பதால் உன் பிரியப்படி செய் என்றுஞ் சொன்னுர்; தொந்தரைக்காகவல்ல மேதர் பக்கயில் திரும்பும்படி சில உத்தியோகத்தர் கேட்பதால் தப்பியோடுகிறேன் என்று சொன்னேன்; பின் எதிரிஸ்சிங்கியும் விஜயவர்தனவும் நெடுநேரம் பேசிக்கொண்டு நிற்கக் கண்டேன்; நாங்கள் தப்பியோடிய அன்று ஒடமுந்தி 5 கியிடங்களுக்கொருமுறை ரவுண்ட் சிறைக்கூடத்திற்கு விஜயவர்தனவுடன் வந்துவந்து போனுர்; தாம் காவலாக நிற்கும்போது தப்பியோடக்கூடாதென்றதை யிட்டுத்தான் அவர் அப்படிச் செய்தார்; அவர் காவலர் சிலருடன் நெடுநேரம் பேசி, நாங்கள் ஒடும்வரையில் காவலர்களை பராமுகப்படுத்தினர். மெனுனும் அர் தோனிப்பிள்ளையுமே அப்பொழுது எங்களுக்குக் காவலாயுள்ளவர்கள். இந்த இரகசியங்களை யெல்லாம் முந்தியே சொல்லியிருப்பேன், ஆனுல் மறியல்வீட்டு உத்தியோகத்தரை மாட்டிவிடுவது சரியல்ல என்று நினைத்தே செய்யாதொழிந்தேன்; இந்த உத்தியோகத்தர்கள் எனக்குப் பல உதவிகளைச் செய்திருக்கிறுர்கள; திரும்ப என்னை அகப்படுத்தியபின்தான், நான் தப்பியோடியது பிழையென்று அறிந்து என்னைப் பாதுகாக்கும்படி இரகசியங்களை வெளிவிடலானேன்."

இரண்டாம் எதிரியாகிய சின்னு அப்புவும் பொடிய சொன்னபிரகாரமே சொன்னுன்;

விசாரணையின்பொழுது மேதர் கட்டடத்தைப் போய்ப்பார்த்த சுப்பர் நாயுடு என்னும் பொலிஸ் ஓடுகள் கழற்றி வைக்கப்பட்டிருந்ததைத் தாம் பொலிஸ் பரிசோதகர் சௌஜாவுடன் கண்டதாகச் சொன்னுன்; பொலிஸ் தலைவராகிய மிஸ்ரர் புறம்லி இவை நடந்தவிடத்தின் படங்களைக் கோட்டில் அணைத்துள்ளார்; பொலிஸ் சார்ஜன் என்பவனை இன்னுனென்று இந்த எதிரிகளினுற் காட்ட முடியவில்லை. விசாரணை இந்த அக்டோபர்மீ 29-ந் தேதி தவணையிடப்பட்டிருக்கின்றது.

## சமாசாரத் திரட்டு.

### மகாத்மா ஜநநதினக் கொண்டாட்டம்.

மகாத்மாவின் ஜநநதினக்கொண்டாட்டத்தன்று பம்பாயில் 60000பவுண் பெறுமதியான கதர்த்துணி வியாபாரம் நடைபெற்றதாம்.

### 30 பேர் மாண்டனர்.

விசாகப்பட்டினத்தில் பெருமழை பெய்தமையினுல் தெருவோரத்திலுள்ள மலையிலிருந்த பெரிய பாறைக் கல்லொன்று உருண்டு விழ 30 பேர் அதில் அகப்பட்டு நெரிந்து மாண்டனர்.

### இராமநாத பிரதிமைப்படம்.

சேர். பொ. இராமநாதனவர்களின் பிரதிமைப் படமொன்றை புதிய அரசாங்க சபை மண்டபத்தில் வைக்க வேண்டுமெனக் கேட்டபோது அதிகாரிகள் அதை வைத்தற்கு உடன்பட்டு அநுமதி கொடுத்திருக்கின்றனராம்.

### சிசு காதகி.

நேகாலையில் ஒருத்தி தான் சோரமாகப் பெற்ற சிசுவைக் கொண்டுபோய்ப் பற்றைக்குச் சமீபமாகவுள்ள கறையான் புற்றில் உயிரோடு போட்டுவிட்டு வர, அடுத்தநாள் யாரோ வழிப்போக்கர் கண்டு வயலில் வேலை செய்துகொண்டு நின்ற பெண்களுக்குக் காட்ட, பெண்கள் தலைமைக்காரனுக்குத் தெரிவித்தனர். பிள்ளை மேல்முழுதும் சேறு புரண்டபடியும் எறும்பு மொய்த்தபடியும் குற்றுயிருடன் காணப்பட்டது. எடுத்து வைத்திய சாலைக்குக் கொண்டுவரும்போது பிள்ளை இறந்தது. தாய் பொலிசாரால் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டாள். விசாரணையில் தன்குழந்தையென்றும் தானே கொண்டு போய் எறிந்ததென்றும் ஒத்துக்கொண்டாளாம். அவளும் வைத்தியசாலையில் நோயாய்க்கிடக்கிருளாம். பொலிசார் அவள் மேல் வழக்குத் தொடர்ந்திருக்கிருர்கள்.

### பல கரங்களுடன் பிறந்த சிசு.

அனுவா வைத்திய சாலையில் ஒரு இந்திய பெண் பல கரங்களுள்ள ஒரு குழந்தையைப் பெற்ருள். இந்த நூதனத்தைப் பார்ப்பதற்குப் பலர் வைத்தியசாலைக்குச் சென்றனர். சிலர் அது தெய்வமாயிருக்கக் கூடுமென்றனராம். ஆனுற் குழந்தை இறந்துவிட பிரேதம் கொழும்புக்கனுப்பப்பட்டதாம்.

### தேகவியோகம்.

ஆனைக்கோட்டை ஸ்ரீ சின்னத்தம்பி அவர்களின் மனைவியாகும் மன்னுர் புகையிரதப் பகுதியில் உத்தியோகமாக விருந்தவரும் சைவ சமயவிருத்தியின் பொருட்டு மன்னுர்பகுதியிற் பெரிதும் அபிமானத்தோடு உழைத்தவருமாகிய காலஞ்சென்ற ஸ்ரீ R. S. சுப்பிரமணியமும் இச்சைவப்பிரகாசயந்திரசாலையிற் கடமைபார்க்கும் ஸ்ரீ R. S. மயில்வாகனம் என்னுமிருவரின் தாயாருமாகிய ஸ்ரீமதி மாணிக்க அம்மையார், சிலகாலமாகத் தன்னைப் பிடித்து வருத்திய நோய் காரணமாக சென்ற செவ்வாய்க்கிழமை (20-10-31) காலை தனது இளைய மகனுடைய கிருகத்தில் மக்கள் சுற்றித்திரர் பிரலாபிக்க தேகவியோகமாயினர். இறக்கும்போது வயசு 80. ஈமக்கிரியைகள் கநிஷ்ட புத்திரனுகிய ஸ்ரீ மயில்வாகனமென்பவரால் பல சுற்றித்திரர் சமுகத்தில் விதிப்படி சிறப்பாகச் செய்யப்பட்டன. நாமும் எமது அநுதாபத்தைக் குறிப்பிடுகிறேம்.

## தந்திச் செய்தி.

### வ. மே. ச.

லண்டன், 22-10-31,

லோட் ஈர்வின் வ. மே. ச. கிளர்ச்சியைப் பற்றியும் இந்திய நிலைமையைப் பற்றியும் தக்க ஆதாரமான சமாசாரங்களை அறிந்துகொண்டேயிருக்கின்றார்.

மஹாத்மா இன்று லோட் ஈர்வினுடன் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தனர். பேச்சின் விபரம் ஒன்றும் வெளியாகவில்லை.

இன்று சிற்றரசர்களும் பிரித்தானிய இந்தியப் பிரதிநிதிகளும் தமக்குள் அளவளாவியதின் பயனுக நல்ல பெறுபேறு உண்டாயிருக்கிறதாகக் கருதப்படுகின்றது. மஹாத்மாவின் எண்ணத்தை அடிப்படையாகக்கொண்ட பிரச்சினைகளைச் சிற்றரசர் பிரதிநிதிகள் கையாண்டனர். இந்தவகையில் இணக்கம் வருமேயானுல் சிற்றரசர்கள் சமயுக்த அரசாட்சியிற் சேர்ந்து கொள்ள உடன்படுவார்கள். லோட் பீல் இந்த விசாரணைக்காகும் நிபந்தனைகளைத் திருப்பி யெழுதுகின்றுர். ஆனுல் சேர் அக்பார் ஹைதரியும் முசம்மதியர்களும் தொடக்கத்திலுள்ள பிரச்சினைகளையே அனுவதித்து நிற்கின்றனர்.

'டெயிலி ஹெரல்ட்' என்னும் பத்திரிகை புதிதாகத் தெரிவுசெய்யப்படும் ஆங்கில அரசின் முதல்வேலை வ. மே. ச. வை குழப்பி விடுவதென்றும் காந்திஜி, முதல் மந்திரியாருக்கு ஒரு நிருபம் எழுதி அதில் அரசாட்சியாளரைக் குறை கூறியிருக்கின்றனர் என்றும், மந்திரியார் தமது மறுமொழியில் காந்திஜியே வ. மே. ச. சித்தியடையாமைக்குக் காரணமென்று எழுதினுரென்றும் இதனுற்ருன் காந்திஜி பேரவைகயில் மிகக் கடினமான சொற்பொழிவு செய்தாரென்றும், கூறிற்று. இக் கூற்றைப்பற்றி முதன் மந்திரியாரைக் கேட்டபொழுது அவர் இது வெறும் புழுகு என்றும் அருவருக்கத்தக்க நோக்கத்துடன் எழுதப்பட்டதென்றும் முழுவதும் மனேபாவமொழிய உண்மை ஒரு சிறிதுமற்றதென்றும் கூறினுர்.

சேர் சாமுவேல் ஹோர் (இந்திய மஹா மந்திரியார்) முதன் மந்திரியாரை ஆமோதித்துப் புதினப் பத்திரிகையின் கூற்றை மறுத்தனர்.

யோர்க் நகரின் ஆர்ச்பிஷப் அவர்களின் தலைமையில் மஹாத்மா மற்றைய சகல குருவானவர்களுக்கும் ஒரு பிரசங்கம் செய்தனர்.

நவம்பர் 13உ வ. மே. ச. பிரதிநிதிகள் லண்டனை விட்டுப் புறப்படுவார்களென்ற வதந்தி பிழையென்றும், ஆங்கில அரசாட்சியாரே நவம்பர் 17உ இப்பிரதிநிதிகளுக்கு ஒரு விருந்து அளிப்பதற்கு ஆயத்தப்படுத்துகின்றனர் என்றும் இந்திய மஹாமந்திரி கூறினுர்.

அமெரிக்காவுக்கு மஹாத்மாவை அழைத்துக் கொண்டு செல்வதற்காக வந்த ஸ்ரீமதி கூஸ் அவர்களையும் அவருடைய 7 வயது 4 வயதுள்ள இரு குழந்தைகளையும் மஹாத்மா சந்தித்தனர். ஆனுல் இப்பொழுது அமெரிக்காவுக்குத் தாம் செல்வதைப்பற்றி ஒரு முடிவும் சொல்லமுடியாமலிருக்கின்றதென விசனத்துடன் தெரிவித்தனர்.

லண்டன் 23-10-31.

மஹாத்மா, ஜவஹர்லால் நேருவுக்கு ஒரு தந்திச் சமாச்சாரம் அனுப்பினரென்றும் அதில் வ. மே. ச. வில் ஒரு நம்பிக்கையும் இல்லையென்று விளக்க வைத்தனர் என்றும் வதந்தி பரவியது. இதுவிஷயமாக மஹாத்மா, இந்திய மத்தியமாகாணங்களிலுள்ள நிலைமையைப்பற்றி ஜவஹர்லால் நேரு அனுப்பிய தந்திக்குப் பதிலாகவே தாம் தந்திச் செய்தியனுப்பியதென்றும், அந்தத்தந்திக்கும் வ. மே. ச. வுக்கும் எவ்விததொடர்பும் இல்லையென்றும் அப்படி விளங்குவது தப்பெண்ணமென்றும் ஒரு ருய்டர் நிருபருக்குக் கூறினுர்.

### காந்திஜியின் வெள்ளாட்டுக்கு முதல் வெற்றி.

லண்டன், 23-10-31.

மஹாத்மா லண்டனுக்குச் சென்ற நாள் தொடக்கம் இதுவரையில் அவருக்கு பால் கொடுத்த வெள்ளாடு, இன்று இஸ்லிங்டன் என்னும் இடத்தில் நடந்த ஆடுமாடுக் காட்சியில் முதல் வெற்றியை அடைந்தது. மத்தியஸ்தர்கள் அதன் கழுத்தில் வெற்றிக்குறியாக நீல நாடாவைக் கட்டும்பொழுது அதற்கு மஹாத்மா காந்தி என்று பெயர் இட்டார்கள். மஹாத்மாவும் தமது கடினமான இராசியப் பிரச்சினைகளைச் சற்று மறந்துவிட்டு இக்காட்சிக்குச் சென்றனர். தமக்குப் பால் தரும் இரண்டு வெள்ளாடுகளையும் மிருதுவாகத் தட்டிக்கொடுத்து "இங்கிலாந்திலுள்ள ஆடுகளும் மாடுகளும் இந்திய ஆடு மாடுகளிலும் பார்க்க மிக் கொழுப்புள்ளவை. இந்தியாவிலேயுள்ள ஆடுமாடுகளும் அங்குள்ள மனிதர்கள்போலப் உணவுக்குறைவுடையவைகளா யிருக்கின்றன" என்றனர்.

மஹாத்மா 'ஈற்றன்' என்னும் கல்வி நிலையத்திற்கும் ஒக்ஸ்போட் சர்வ கலாசாலைக்கும் சென்றனர். அங்காங்கு அவர் நன்கு உபசரிக்கப்பட்டனர்.

## சாதிச் சங்கடம்.

### கட்டுரை.

(அன்பன் எழுதுவது.)

'லொடலொடாக்' என்னுஞ் சப்தத்துடன் வண்டி நின்றதும் மாமூல்பிரகாரம் ஒருவரையொருவர் நெக்கித் தள்ளிக்கொண்டு சிலர் என்னுடைய......? அல்ல, நானிருந்த வண்டியுள் புகுந்தனர். புகுந்தவர்கள் நின்றுகொண்டிருப்பார்களா? அவ்விதமாயின் அது உலகத்தின் ஒன்பதாவது அதிசயமாகக் கருதப்படுமென்கையால், வழக்கம்போல்—ஒருவர் மேலொருவர்—உட்கார்ந்தார்கள். அதில் ஒருவர் எனக்கு எதிர் ஆசனத்திலிருந்த தடித்த, தொந்தி மனிதருக்குப் பக்கலில் அமர்ந்திருக்கக் கூடும். ஏனெனில், பத்திரிகையிலாழ்ந்திருந்த நான் அதைக் கவனிக்கவில்லை. ஆனுல் பின்னுல் நடந்த ஒரு சம்பவம் அதனைக் கவனத்திற்குக் கொண்டு வரும்படி செய்தது. உட்கார்ந்திருந்த அந்தத் தடித்த, தொந்திராயர் உடனே விஷம் தீண்டப்பட்டவர்போல் துள்ளிக் குதித்தெழுந்தார். நான் திடுக்கிட்டு திமிர்த்து நோக்கினேன், ஒன்றும் பிரியவில்லை. ராயருக்குக் கை கால்களெல்லாம் உதறலெடுத்தன; மூக்குநுனி சிவந்திருந்தது; கண்களும் அப்படியே; அத்துடன் பிதுங்கின; காதுகளை நான் கவனிக்கவில்லை. வாயை வாயைச் சப்பினுர்போல் தோன்றிற்று. நிரேகம் நடுக்கப் பிரமஹத்தி பிடித்தவர்போல், அல்லது நெருப்பில் நிற்பவர்போல் அங்கு மிங்கும் ஆடினுர்; சால்வையை உதறித் தோளில் போட்டுக் கொண்டார்; வேட்டியை வயிற்றிற்குமேல் இழுத்து விட்டுக் கொண்டு பொடி டப்பியைத் திறந்து, மினமின விழித்தபடி ஒரு சிட்டிகை மூக்கினுள் போட்டுக் கொண்டார். (கண்ணிலும், வாயிலும் மட்டும் போடவில்லை.) அவரது நிலைமையைக் கண்டதும் நான் விலவிலத்துப் போகும்படி அவ்வித கோரமாகத்தோன்றினுர். எனக்கு உண்மை பிரியவில்லையாயினும் அவரது தோற்றத்திலிருந்து நான் ஊகித்துக் கொண்டவை பின்வருமாறு:—

1. பேய் பிடித்திருக்கவேண்டும். அல்லது பிசாசு, அதுவுமின்றேல் சங்கிலி சாப்பளி, மாடன் மூடன், கருப்பன் சிகப்பன் இவைகளில் ஒன்று.
2. சாமி, பூதம் இவைகளில் சந்தம் உண்டாகியிருக்கவேண்டும். முக்கியமாக அநுமாரா யிருக்கலாம்.
3. மலபாதை, சலபாதை (மிக அவசரமாக)
4. கனவு. (சம்பாவிதமான)

நேயர்காள்! எனது இந்தத் தீர்மானங்கள் சரியாயிராத பட்சத்தில் அவர் தமது 'ரிக்கெற்' றையாவது போக்கடித்திருக்கவேண்டும். அதுவுமில்லையென்ருல் கீழே தரும் பிரிவைக் கவனியுங்கள்.

1. பிரசவம்.
2. நரகம்.
3. மனைவி, மக்கள்.
4. பிரமஹத்தி.

பிரசவம், பிரசவம், பிரசவம் பத்து முறையல்ல, பதினுயிரந்தரம் அழுத்தந் திருத்தமாகச் சொல்லுகிறேன். ஏனென்ருல், உங்களுக்குத் தான் தெரியுமே! அந்த ரகர சங்கதி. இந்திய தமிழ்ப் பத்திரிகை சிலவற்றின் கையில் சிக்கவேண்டியதுதான் தாமதம். ஐயாடா! அது அடையும் பதவி! (சட்டசபைப் பதவியல்ல) சுருக்கச் சொல்லின் அது கீழே ஒரு வாலும், முன்னே ஒரு கொம்பும் புதிதாக முளைத்துச் சிறிது மாற்றத்துடன் வெளிவரும். அதுதான் இது 'ற' நகரம் என்பது. ஆனுல், அப்பத்திரிகாலயங்களில் 'ர' என்ற எழுத்துக்கள் எதற்காக வைத்திருக்கிருர்கள்? அவற்றை உபயோகிப்பதில்லையா? அவை வீணுக்கா? என்று நீங்கள் வினவக்கூடும். சரியே. அந்த 'ர' எழுத்துக்கள் எவற்றிற்கென்ருல், 'ற' உபயோகிக்கவேண்டிய இடங்களில் தாராளமாய் உபயோகிப்பதற்கேயாம். நிற்க, விஷயம் வேறு வழியில் இழுத்துக் கொண்டதால் இந்தப் பாராவை வாபீஸ் பெற்றுக்கொண்டு, பிரசவம், பிறசவம் அல்ல என்பதை ஞாபகமூட்டுகிறேன்.

இப்பொழுது, இந்தப் பிரசவத்திற்கும் அந்தத் தொந்தி மனிதருக்கும் என்ன தொடர்பு இருக்கலாம்?! என்று நீங்கள் அவசரப்படுகிறீர்கள். அதுதானே கூடாது. 'அவசரப்படேல்' என்பது......... 'ஔவை' வாக்கல்லவா? உங்களில் யாரும் பெண்ணினமாயின் பிரசவத்திற்குச் சற்றுமுன் நிகழ்வது என்னவென்பதை அறிந்திருப்பவர்கள்; அல்லது அறியப் போகிறவர்கள். (ஒருகால் அந்த அறியும் பாக்கியம் கிட்டாமலும் போய்விடலாம்.) ஆனுல் நீங்கள் ஆணினமாயின், 'பிரசவ வேதனை' என்று ஒன்று, எது உண்டோ, அதுவே அம்மனிதர் அநுபவித்திருக்கலாம் என்பது எனது கீழ்ப் பிரிவு முதல் தீர்மானம். அடுத்தது நரகம். நரகத்தில் அநுபவிக்கக் கிடப்பது இன்பமா? துன்பமா? என்பது எனக்குத் தெரியாது. நரகத்தை நம்புகிறவர்கள் உங்களில் யாராவது இருந்தால், அதை நீங்களே நேரில்பரிட்சித்துக் கொள்ளலாமாகையால் அதைப்பற்றி உங்களுக்கொன்றுஞ் சொல்ல விரும்பவில்லை. நம்பாதவர்களுக்கும் சொல்லிப் பயனில்லையாகையால், அம்மனிதர்—தொந்திராயர் 'நரகவேதனை' அநுபவித்திருக்கலாம் என்பது இரண்டாந் தீர்மானம். மூன்ருவதும், நான்காவதும் அவ்வளவு பொருத்தமில்லையாயினும் சும்மா போட்டு வைத்தேன். என்ருலும், மனைவி, மக்களைப் பற்றிய ஏதும் அதிர்ச்சியான எண்ணங்களோ, அன்றிப் பிரமஹத்தி தோஷந்தானே ஏதோ ஒன்றினுல் அவர் அவ்வித கோரநிலையில் தோற்றப்பட்டாரென்பதுவரை எனது அசல் தீர்மானங்களாகும். ஆனுல், ஆ! அந்தப் பொல்லாத கர்வம் பிடித்த மனிதரை நினைத்தால் இப்போதும் கோபம் கொந்தளிக்கிறது. ஏனென்ருல், அவர் எனது அத்தனை தீர்மானங்களுள் ஒன்றிற்காவது அடங்கியவரல்ல என்று பின்னுல் தெரியவந்தது. அம்மனிதர் ஒரு நிமிடமல்ல, இரண்டு நிமிடமல்ல, வண்டி புறப்பட்டு நிமிடங்கள் ஐந்தாகியும் நின்றுகொண்டே யிருந்தார். நான் சிடுமூஞ்சியென்று வாலைச் சுருட்டிக்கொண்டு சும்மாவிருக்கக் கூடாதா? வந்தது விபத்து. தொண்டையைச் சரிப்படுத்திக் கொண்டு, "ஐயா, பெரியவரே!..............." என்றேன். பதிலில்லை. "ஐயா! உங்களைத் தானே............" என்று மீண்டும் வினவினேன். 'ஹூம்' என்று உறுமிக்கொண்டு என் பக்கந் திரும்பினுர். "நின்றுகொண்டிருக்கிறீர்களே, உட்காருவதுதானே" என மரியாதையுடன் விண்ணப்பித்தேன். "ஆப். ய்...ய்... உட்காருவதா?" என்று கர்ச்சித்தார் அவர். இப்பொழுது எனக்குப் பல சந்தேகங்களுதிக்கவே நாற்புறமும் திரும்பிப் பார்க்கலானேன். ஷ்டேசனில் வண்டி நின்றபொழுது ஏறியவர்களிலொருவர் நமது ராயரிருந்த ஆசனத்தில் ராயருக்குப் பக்கலில் அமர்ந்துகொண்டதற்கும் ராயர் எழுந்து நின்று பலவகைப்பட்ட வேதனைகளில் எதுவென்று வரையறுத்துச் சொல்லக் கூடாத வேதனைகளடைவதற்கும் என்ன சம்பந்தமிருக்குமென மண்டையை உடைத்துக்கொண்டேன், பயனில்லை. மூளை இரவல் வாங்கவேண்டிய நிலைமையில் நல்லவேளையில் அவர் என்மீது கருணைகொண்டு, பொடி டப்பாவைத் திறந்துகொண்டே என்னை நோக்கிக் கூறியதாவது. "தம்பி! இதுவோ கலியுகம். இந்தக் கலியுகத்தில் எல்லாம் தலைகீழாகமாறும் என்பது சாஸ்திர சம்மதம். யாரையும் குறைகூறிப் பயனில்லை. எல்லாம் காலவித்தியாசம் என்ன செய்கிறது" என்பதாகும். "ஆனுல் மனிதர்களாகிய நாம் கால் கீழாகவும், தலைமேலாகவும் இருக்கிறேமேயொழிய கால்மேலாகவும், தலை கீழாகவும் இன்னும் மாறவில்லையே, இந்த வித்தியாசத்தை நாம் கைக்கொள்ளாதது பெரிய விதியாசமல்லவா?" என்று கூற வாய் திறந்தேன். 'அவசரப்படேல்' என்பதை நினைத்துக்கொண்டு, 'ஆம். ஆம். பத்துமுறையும் கலியுகந்தான். அதிற் சந்தேகமில்லை. பஞ்சாங்கங்கூடச் சொல்லுகிறதே" என்று கூறி, "ஆனுல், தாம் எதற்காக அவ்விதம் தெரிவிக்கிறீர்கள்?" என்ற கேள்வியை எழுப்பினேன்.

## பிற்செய்தி.

லண்டன் 23-10-31

சம்யுக்தபண அதிகாரத்தைப்பற்றி லோட்பீல் பிரேரித்த பிரேரணையை சிற்றரசப் பிரதிநிதிகளும் மற்றையோரும் ஏற்றுக்கொண்டனர். இதுவே, வ. மே. ச. இதுவரையில் முடிவு கட்டிய பிரச்சினையாகும். மஹாத்மா, உப்பு வரி விதிக்கும் உரித்தையும், தேசக் கடன் தொகையையும்பற்றிப் பின்னும் விவாதிப்பதற்குச் சொன்ன பிரச்சினையை இந்திய மஹாமந்திரியார் ஏற்றுக்கொண்டனர்.

இந்தியச் சிற்றரசர்களின் பிரஜைகள் சமயுக்த நீதிமன்றத்திற்கு மனுப்பண்ணிக் கொள்ளும் உரிமையுடையவர்களாக இருக்கலாமென, சிற்றரசர்களின் பிரதிநிதியாகும் சேர் மிர்ஸா இஸ்மேல் சம்மதிக்கும்படி மஹாத்மா செய்தமை மிக முக்கியமான பிரச்சினையாகும். சமயுக்தச் சட்டங்களைப்பற்றியும் அரசாட்சி அமைப்பைப் பற்றியும் இந்த நீதிமன்றத்திற்கு மனுப்பண்ணலாம்.

பிக்கானீர் மஹாராஜா, வைத்தியர்களின் ஆலோசனைப்படி தாம் மாரிகாலத்தில் இங்கிலாந்தில் தங்க முடியாமல் இருக்கின்றதெனக்கூறி வ. மே. ச. த்தின் அநுமதியுடன் புறப்படுகின்றுர்.

அநேகர் கேட்டுக்கொண்டபடி

# இலங்கா நெசவுக் கம்பனியார்

## இந்த 1931-ம் ஆ ஐப்பசி௴ 24-ந் திகதி

சனிக்கிழமை தொடக்கம் ஒருகிழமைக்கு மாத்திரம்

## பெரியகடை—வண்ணார்பண்ணை றேட்டில்

சிவன்கோவிலுக்கு எதிராக

## இலங்கையில் நெசவு செய்த புடைவைக்காட்சி

இன்னுமொருமுறை வைக்கிறதற்கு ஒழுங்குசெய்திருக்கிறார்கள்

வருகிற

# தீபாவலிப்பண்டிகைக்கென்றே

விசேஷமாதிரியாக நெசவுபண்ணப்பட்ட

புதுமாதிரியான பட்டுச்சேலைகள், வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள், தாவணிகள்

எல்லாம் காட்சிக்கு வைக்கப்படும்.

மற்ற வியாபாரிகளுக்குப் போட்டியாகவே நாங்கள் விலைகுறித்திருக்கின்றோம்

வருகிற வருஷத்தில் சுவதேசியென்றதே உங்கள் வாய்ச்சொல்லாயிருக்கட்டும்.

# இலங்கை நெசவுப் புடைவைகளை வாங்குங்கள்!

உள்ளூர்க் கைத்தொழிலை ஆதரியுங்கள்!!

(Y. 20 26 10-31— )


(௩-ம் பக்கத் தொடர்.)

"ஒன்றுக்குமல்ல, உலகத்தின் தற்போதைய நிலைமைக்குத்தான் சொன்னேன். பண்டைய காலம் எவ்வளவுக்கு அறிவு, ஒழுக்கம், சீர், சிறப்பு, பக்தி, வைராக்கியம் முதலிய நதும்பி விருந்தவோ அவ்வளவுக்கு இன்றையகாலம் எதிராக மாறியிருக்கிறது. சாஸ்திரங்களென்ன, சம்மதங்களென்ன, தேவர் வாக்குகளென்ன, முனிவர் வாக்குகளென்ன, கோயில்களென்ன, கடவுள்களென்ன எல்லாம் கால்மாடு தலைமாடாக மாறிவிட்டது. சாதிகள் ஒன்றாய்ப்போச்சு, சமயங்கள் ஒன்றாய்ப்போச்சு, கடவுளும் ஒன்றாய்ப்போச்சு................" என்ற பதில்கள் சாமாரியாய் வருகையில் எனக்கு மற்றுமொரு சந்தேக முதித்தது. உடனே, "சற்றுப் பொறுங்கள், வந்துவிடுகிறேன்," எனக் கூறிவிட்டுக் கையிலிருந்த பத்திரிகையை எடுத்துப் பக்கம்பக்கமாகப் பிரித்தேன்; புரட்டினேன்; கண்களைத் துடைத்துக்கொண்டு பார்த்தும் நான் தேடியது கிடைக்கவில்லை. ஆகவே எனது ஆவல் தலைக்குமேல் இரண்டு முழம் அதிகரித்துவிட்டது. பத்திரிகையைச் சுருட்டிக் கசக்கி (பிழிந்து சாறை யெடுத்துக் கொண்டு சக்கையை) வீசினேன். முதலில் என்னைத் திடுக்கிடச்செய்த அந்த நாயர் இப்பொழுது திடுக்கிட்டு, (பத்திரிகைக்காகவல்ல கடுதாசியில் வெற்றிலைப் பொட்டணம் மடிப்பதற்காக) வீசிய என் கையைப் பிடித்துக் கொண்டு, "தம்பி! தம்பி! என்ன காரியஞ் செய்கிறாய், பத்திரிகையல்லவா, வீசுகிறாயே?" எனவும்,

"ஆமையா, இந்தப் பாழும் பத்திரிகைகள் குணம் இப்படித்தான். சத்தைவிட்டுச் சக்கையைக் கொண்டு வெளிவருவன" எனறேன்.

"ஏன், என்ன சங்கதி?" என்று நாயர் நீட்டினார். அப்படி வாரும் வளத்தில் என்று மனதில் நினைத்துக்கொண்டு, "இந்தியா சுயஆட்சி அடைந்ததைப்பற்றி ஒருவார்த்தை, ஏன் ஒரு எழுத்துக்கூடப் பிரசுரிக்கவில்லை" என்றேன். எனது திடும் பிரவேசமான வார்த்தைகளைக் கேட்ட நாயர், வீட்டில் இழவு விழப்பெற்றவர்போல் "என்ன, என்ன, சுயஆட்சியா? இந்தியாவா? எப்பொழுது? எங்கே, எங்கே?" என்று பத்திரிகையைப் பிடுங்கினார். • இன்பத்தினாலோ, துன்பத்தினாலோ அவர் அடைந்த வெடுதியில் சற்றுமுன் யான்கூறியவற்றை மறந்து பத்திரிகையைப் பிடுங்கிப் பிரித்தார். "அதுதான், பத்திரிகையில் இல்லையென்று முன்னமே கூறினேனே" என்றேன் நான்.

"அப்படியாயின், பின், பின், பின்னர், சீக்கிரம், எங்கே? எங்கே?" என்று அங்கலாய்த்தார் அவர். நான், "என்ன, என்ன?" என்ன சங்கதி?" என்றேன்.

"அதுதான் அந்தப் பாழும் சுயராட்சியம்"

"பாழும் சுயராட்சியத்திற் கென்ன?"

"தம்பி! கேலி பண்ணாதே, சீக்கிரம் சொல்"

"என்ன சொல்ல?"

"இந்தியா சுயராட்சியம் அடைந்துவிட்டதாகச் சொன்னாயே, அதைத்தான்."

"ஐயோ! நான் சொல்லவில்லையே, தாங்களல்லவோ தெரிவித்தீர்கள்."

"ஆ! என்ன? நான்! நானா? எப்போ தெரிவித்தேன்?"

"சற்று முன், 'சாதிகள், சமயங்கள் எல்லாம் ஒன்றாய்ப்போயிற்று' என்பதாக"

"ஆனால் சுய ஆட்சி அடைந்ததாகத் தெரிவிக்கவில்லையே"

"அதுதானே இல்லை. சாதி, சமயங்களெல்லாம் ஒன்றாய்விட்டால், சாதி, சமயங்களுக்காக இந்தியாவைக் காப்பாற்றும் பொறுப் பேற்றுக்கொண்டுள்ள பிரிட்டிஷார், இருந்தவிடந் தெரியாமல் சொல்லாமல் கப்பலேறிவிட்டிருப்பார்கள். ஆகவே, இந்தியா சுயமே ஆட்சிசெய்ய வேண்டியதுதானே? அது சுயாட்சியல்லவோ?" என்றேன். அவர் மௌனமாயிருந்தார்...... ...............இல்லை. நின்றுகொண்டிருந்தார். நான் எழுந்து, 'தாங்கள் ஏன் உட்காராது நின்றுகொண்டிருக்கிறீர்கள்?" என்று வினவினேன். அவர் பாதிமனத்தோடு, புதிதாக ஏறி உட்கார்ந்துள்ள மனிதனைச் சுட்டிக்காட்டி, எனது காதோடு "அவன் தீண்டாச் சாதி" என்று கூறினார். நான் ஒரேஒரு விநாடிநேரம் யோசித்துவிட்டு, "சாதி' என்றால் என்ன 'தீண்டா' என்றால் என்ன என்று மட்டும் கேட்டேன்.

"அட பைத்தியமே! இது தெரியாதா? நீ சிறுபையன்" என்றார்.

"இல்லைத் தரித்திரமே! தெரிந்த நீதான சொல்லேன்"

என்று நான் துணிந்துகொண்டு கேட்டதும், நாயர், 'இதேதடா சங்கடம்' என நினைத்துப் பொடி டப்பியை யெடுத்தார். அப்போது "இனி, இந்தப் பாழும் றெயில் வண்டியைக் கனவிலும் கருதவில்லை" என்ற வாக்கியங்கள் அவர் நெற்றியில் எழுதி ஒட்டியிருந்தாற்போல் என் மனதக் கண்களில் தோன்றிற்று. உடனே நான், "ஆ், அதுதான்சரி, அதைவிட வேறு வழியுமில்லை. அன்றியும் 'வில்லியம் கிரியில்' என்ற அமெரிக்கர் தமது றெயில் வேக் கம்பனியாருடன் சண்டைபோட்டுக் கொண்டதால் றெயிலைப் பகிஷ்கரிக்கவில்லையா? இதில் கஷ்டம், பிரமாதம் ஒன்றுமில்லையே" (ஆனால் காசிக்குப்போய்க் கைலாயரைத் தரிசிக்க வேண்டிவ்?) என்று கூறுகையில் வண்டி நின்றதும் நாயர், ஒரு 'வந்தனம்' கூடச் சொல்லாமல் தமது குடையென்று எண்ணி எனது கால்செருப்பிலொன்றை யெடுத்துக் கக்கத்தில் வைத்துக்கொண்டு சென்றுவிட்டார். 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி அடியிலல்லவா?'


இது உம்முடைய தொந்தரவுகளையும் கிலேசங்களையும்நீக்கும்

—மிகச் சொற்பவிலையில் வருடம்
—முழுவதும் நற்சுகம் உமக்குண்டா
—கும். எப்படியென்றுபாரும்.
—சொற்பபணத்தைச் செலவு
—செய்து

லி ஓ பா

## மருந்துப் பெட்டியை வாங்கும்.

இதில்:—

—லிட்டில்ஸ் ஓறியண்டல் பாமில்
—ஒரு சீசா,
—ஹென்றீஸ் ஜ்வரஹரி
— ,, ஓமம் கற்பூர்
— ,, கில்லர் கோல்ட்
—லி. ஓ. பா. இருமல் வில்லைகள்
— ,, பேதிமாத்திரைகள்
— ,, சர்ம சம்ரக்ஷணி
— ,, தூர்க்கத்தமாத்தி

8 முதலிற் சொல்லப்பட்ட மருந்தின் தனிவிலைக்குமாத்திரம்,

4 அதாவது ருபா 3. அணு 8. தபாற் செலவு பிரத்தியேகம்.

சாதாரணமான ஒவ்வொரு வியாதிக்கும் சம்பிக்கையான ஒளவுடதம. சுலபமானது. ஆனால் சக்தியுள்ளது, அநுபவத்திற்கண்டது. அநேகரால் கைக்கொள்ளப்படுவது

இதில் ஒருபெட்டியை உமது வைத்திய வியாபாரியிடம் வாங்கும்

அல்லது நேரே எழுதுவது:
லிட்டில்ஸ்
ஓறியன்டல்பாம் டிப்போ,
பெரியதெரு,
மணிக்கூட்டுச்சந்தி,
கொழும்பு.
தபாற்பெட்டி இலக்கம் 298, அல்லது,
லிட்டில்ஸ் ஓறியன்டல்பாம் அன்ட் பார்மசியூட்டிக்கல்ஸ் லிமிட்டெட்,
தபால்பெட்டி 67,
சென்னபட்டணம்.

(Y. 9, 1 31—12 32, C)






(Y 19 28 9 31 to 27 9 32)

ஆண்மைத் தனத்தின் அரசன்.

## ஹொரஹ் நால் டூப்ரா லேகியம்.

ஒரே வேளையில் பரிட்சைபார்க்கலாம்.

பலவீனமாய்த் தளர்ந்து சோர்வடைந்த நரம்புகளையும் சஞ்சலப்படும் மனதையும் ஒரே வேளை லேகியம் சாப்பிட்டபிறகு [illegible] நரம்புகளுக்கும் பலமும் திடமும் உண்டாக்கும்.

[illegible]

20நாள் 40வேளை டப்பி 1க்கு விலை ரூ 4.00 10நாள் 20வேளை டப்பி1க்கு விலை ரூ 2 25 மேலே சொல்லப்பட்ட வியாதிகளையும் இது சொஸ்தப்படுத்தும்.

கேட்லாக் இலவசம்.

K. V. Vappadurai & Co, Portonova S I.

(Y 18 28 9 31 To 27 9 32)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறையறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by S ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna.